மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு: 1968, 1969 ஆண்டுகளில் இருந்த வறட்சிச் சூழ்நிலையில் இம் மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியென்று அறிவிக்கப் பட்டது. பல்வேறு துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நகர்ப்புறத்திலும், கிராமப் பகுதிகளிலும் குடிநீர் வசதிகளை மேம்படுத்த முதலிடம் கொடுக்கப்பட்டது. இதற்கென இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 2.87 கோடியாகும். இது இம் மாநிலத்திலேயே ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மிக உயரிய தொகையாகும். துயர் தணிப்புக்காக மொத்தம் ரூ 3·07 கோடி செலவிடப்பட்டது. மேலும், கூடுதலாக ஒதுக்கப்பட்ட தொகை இதில் சேராது. இப்பகுதியைப் பார்வை யிட்ட வருவாய்த்துறை செயலாளர் அறிக்கை கிடைக்கப் பெற்று ஆய்வு செய்யப்பட்டதும் ஒப்புக்கொண்ட வேலைகளையும் முடிக்கப்பெறாத வேலைகளை யும், முடிப்பதற்குக் கூடுதல் தொகை செலவழிக்கப்படும்.

திருப்பத்தூர், குடியாத்தம் வட்டங்களும், வாணியம்பாடி துணை வட்டமும் அடங்கிய குறிப்பாக திருப்பத்தூர் கோட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமைகளைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை ஒன்று இப்போது அனுப்பியுள்ளார். அவர் பாசன ஏரிகளும், கிணறு களும் மிக விரைவில் வறண்டு வருவதாகவும், குடிநீர்ப் பற்றாக்குறையும் உணரப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். அந்தத் துயரைத் தணிப்பதற் காக திருப்பத்தூர் கோட்டத்தில் தகுந்த துயர் தணிப்பு ஏற்பாடுகளை மேற் கொள்ள ரூ. 7 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும், அவர் இம்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் நிலவும் நிலைமை யைப்பற்றி மேற்கொண்டும் ஒரு அறிக்கை அனுப்பி வைப்பதாக உறுதி கூறினார். மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற் குறிப்புகளின மேல் இது குறித்து வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்புரை கிடைக்கப்பெற்று அது ஆய்வு செய்யப்பட்டவுடன் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

கோயம்புத்தூர் : இம்மாவட்டம் முழுவதும் 1969-ல் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியென அறிவிக்கப்பட்டது. தொழிலாளருக்கு போதிய வேலை கொடுக்கும் நோக்கத்துடனேயே துயர் தணிப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. இம்மாநிலத்தில் மிக உயர்ந்த தொகை பெறும் 4-வது மாவட்டமாக உள்ள இம்மாவட்டத்திற்கு, ரூ. 2·19 கோடி ஒதுக்கப்பட்ட தொகையில் துயர் தணிப்பு பணிகளுக்காக ரூ. 2·38 கோடி செல வழிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் குடிநீர் வழங்கும் பணிக்காக வெள்ளக் கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ 3·41 இலட்சம் ஒதுக்கப் பட்டது. ஒப்புக்கொண்ட துயர் தணிப்பு பணிகள் யாவும் மக்கள் நலனைக் கருதி முடிக்கப்பெறும் வகையில், அரசு அண்மையில் இம் மாவட்டத்திற்கு ரூ. 9·41 லட்சம் அனுமதித்தது. முடிக்கப்பெறாத வேலை களுக்காக கூடுதல் நிதி வேண்டி, செயற் குறிப்புகளை அனுப்பி வைக்கையில், மாவட்ட ஆட்சித் தலைவர், துயர் தணிப்புப் பணிகள் தொடங்குவதற்கு அவசியமான வறட்சி நிலை அண்மையில் எதுவும் ஏற்பட்டதாகத் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அரசு இந்த நிலைமை குறித்து உன்னிப்பாக கவனித்து வருகிறது. அத்தகைய அறிக்கை ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து கிடைக்கும் போது, மக்களைப் பாதிப்பதற்குக் காரணமாயுள்ள, துயருறு நிலைமைகளைத் தணிக்கைக்கூடிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) அறிவிப்புகள்

(அ) சட்டப்பேரவை சுதந்திராக் கட்சியின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டதுபற்றி அக்கட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டசபை சுதந்திராக் கட்சித் தலைவரிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

"அன்புடையீர்,

வணக்கம். தமிழ்நாடு சட்டசபை சுதந்திராக் கட்சியின் கூட்டம் இன்று மாலை (31-3-70) சென்னையில் நடை பெற்றது. கீழ்க்கண்ட நிர்வாசிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தலைவர் : திரு. கரு. சீமைச்சாமி, உபதலைவர்/ செயலாளர் : டாக்டர் எச். வி. ஹாண்டே, பொருளாளர் : திரு. ஆர். கிருஷ்ணசாமி கௌண்டர், கொறடா : திரு. கே. எம். ராமசாமி கௌண்டர்.

தங்கள் அன்புள்ள

கரு. சீமைச்சாமி."

இதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் மீது திரு. என். எஸ். வி. சித்தன் சாட்டியுள்ள குற்றச்சாட்டு குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். 28-3-70 ஆம் தேதியன்று நான் இந்த மன்றத்தில் பேசிய பேச்சில் சில பகுதிகளை நீக்கப்போவதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இப்போது நான் அவருடைய தீர்ப்பை எதிர்பார்க் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 28-3-70 அன்று திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் இந்த அவையில் பேசியபோது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தம் பகுதியில் நிலம் வாங்கியதைப் பற்றியும், அவருடைய சொந்த நிலத்தை விற்றது பற்றியும் ஒரு கருத்தைக் கூறினார்கள். அமைச்சர் என்பதனாலே அதிகமான விலைக்கு அந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டதாக குற்றம் சாட்டினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்திருந்து அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்பதற்கு விளக்கம் கூறினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறிய பிறகு நான் திரு. சித்தன் அவர்களிடம் "அப்படிக் கூறியதற்காக வருந்துகிறேன். அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்" என்பதாக அவர்களே கூறி விடுவது நல்லது என்று பலமுறை சொன்னேன்.

அப்போதும் "நான் அப்படிக் கூறவில்லை" என்பதாகக் கூறினார்கள்.

நான் உடனேயே "அப்படிக் கூறியிருந்தால் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்" என்பதாகச் சொன்னாலும் போதும் என்றேன்.

அதற்கும் அவர் இசைவு தரவில்லை. நான் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார். அதன் காரணத்தினால் நான் அவருடைய உரையில் இருந்து அந்தப் பகுதி நீக்கப்படும் என்று அப்போதே அறி வித்தேன்.

பிறகு அவருடைய உரையின் சட்டசபை குறிப்பை எடுத்துப் படித்துப் பார்த்த நேரத்தில், 'நான் கூறவில்லை' என்று அவர் சொன்னது அங்கே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத் திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று திரு. சித்தன் அவர்களே கூறியிருக்கிறார்கள். இது அவையின் நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கப்படும் என்று அறிவித்திருக்கிறேன்.

ஆனாலும் மேலும் ஒன்றையும் கூறிவிட விரும்புகிறேன். அவையில் எந்தக் கருத்தை வேண்டுமானாலும் கூறிவிடுவது, எப்படிப்பட்ட குற்றச் சாட்டை வேண்டுமானாலும் கூறிவிடுவது, கூறிவிட்ட பிறகு அதற்கு